★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 கார்த்திகை 12 ஸபர் 11 இதழ் 288

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 28—11—82

நாளை காலை 10 மணிக்கு
மங்களகரமான
திறப்பு விழா
ranjanas
TV/VIDEO CLUB
வீடியோ/ஏரியல்/மூவி சென்ரர்
60, பெரியகடை,- யாழ்ப்பாணம்.
5286

### விடுதலைகோரி 2நிமிட மௌனம்!

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமில் வைக்கப்பட்டுள்ள மதகுருமாரையும், பல்கலைக்கழக விரிவுரையாளர் நித்தியானந்தன். திருமதிநிர்மலா நித்தியானந்தன், மற்றும் இளைஞர்களையும் விடுதலை செய்யக்கோரி நேற்று யாழ். திறந்த வெளி அரங்கில் நடந்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் பிரசாரக்கூட்டத்தின் முடிவில் இருநிமிட மௌன அனுஷ்டிக்கப்பட்டது.

(மா)

# 'தமிழர் கண்ணீரைத் துடைத்த மதகுருமாரை மறக்கக்கூடாது!

## ஒன்றுபட்டு அவர்களின் விடுதலையைக் கேட்போம்!"

### யாழ். நகரில் அமிர்தலிங்கம்

(ஏ. வி. மாணிக்கம்)

"1977ஆம் ஆண்டு தென்னிலங்கையிலிருந்து அகதிகளாக வந்த தமிழ் மக்களுக்கு உடைதந்து, உணவு வழங்கி கண்ணீரைத் துடைத்த மதகுருமாரையும், கன்னியாஸ்திரிகளையும் நாம் மறக்கமுடியாது; அந்த நன்றிக்கடனை தமிழ் இனம் மறந்து விடவும் கூடாது. அவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்கள். அவர்களை விடுதலைசெய்யக்கோரும் விஷயத்தில் எம்மிடையே எவ்வித பாகுபாடும் இருக்கக்கூடாது" என்று எதிர்க்கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்டார்.

யாழ். திறந்த வெளி அரங்கில் நேற்று மாலை சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான பிரசாரப் பொதுக்கூட்டத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது தலைவரும் நல்லூர் எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடாத்தினர்.

இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது;

"மதகுருமார் இன்று பாதுகாப்பற்றநிலையில் வாழ வேண்டியிருக்கிறது. விசாரணையின்றிக் கைதுசெய்யப் படுகிறார்கள்.

"மதகுருமார் கைது செய்யப்பட்ட சம்பவங்களை எதிர்த்து பாராளுமன்றத்தில் கூட மனித உரிமை எவ்வளவு தூரத்துக்கு மீறப்படுகிறதென்று இடித்துச்சொன்னேன் அமைச்சர்திரு. திரு. தேவநாயகம் அப்பொழுது மனித உரிமை என்றால் என்ன என்று கேட்டார்! அவ்வளவு தூரத்துக்கு மனித உரிமை பற்றி அவர் விளக்கம் கொண்டிருக்கிறார்.

"நாங்கள் எமது மக்களைப் பாதுகாக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோமே ஒழிய விருதுக்கு வேட்டையாடவில்லை. அற்ப சூறிய அரசியல் ஆதாயம்தேட நாம் பாராளுமன்றம் செல்லவில்லை. எமது இனத்தின் விடுதலையை உலகெங்கும் எடுத்துக்காட்ட, பறை சாற்றவே பாராளுமன்றம் சென்றோம்".

"எதிர்க்கட்சித் தலைவர் பதவி சிங்கள மக்களோ – ஜனாதிபதியோ – பிரதமரோ தந்ததல்ல; ஸ்ரீலங்கா சுதந்திரக்

(8ம் பக்கம் பார்க்க)

குருநகரில் மதகுருமாரை விடுவிக்கக்கோரி

## உண்ணாவிரதம்; மௌன ஊர்வலம்!

(யாழ்ப்பாணம்)

கைது செய்யப்பட்ட மதகுருமாரை விடுதலை செய்யக்கோரி குருநகர் பகுதியைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் நேற்றுக் கறுத்தப்பட்டி அணிந்து, 50சுலோக அட்டைகளைத் தாங்கிக்கொண்டு மௌன ஊர்வலமாகச் சென்று ஞானப்பிரகாசியார் கிலை முன்றலில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். ஊர்வலம் ஆரம்பமான போது இப்பகுதித் தேவாலயங்களிலிருந்து மணி ஓசைகள் ஒலித்தன.

நேற்றுக்காலை 7–30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் சிறுவர்கள், சிறுமியர்கள், ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் கலந்து

[8–ம் பக்கம் பார்க்க]

பெண்களே இல்லாத

## குருநகர் முகாமிலிருந்து நிர்மலாவை மாற்றுங்கள்!

### பாராளுமன்றத்தில் யாழ்.எம்.பி. 'யோகேஸ்' நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் உறுதி

(இ. கந்தசாமி)

'ஒருகொலைக்குற்றம் செய்த பெண்ணுக்கும், பெண்காவலாளி ஒருவரே பாதுகாவலாக இருப்பர். ஆனால் பெண்களே இல்லாதகுருநகர் முகாமில் தனியிடத்தில் நிர்மலா அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார் அவரை வேறு இடத்திற்குமாற்றிவிசாரணைநடத்த பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

பாராளுமன்றத்தில் அவசரகாலசட்டவிவாதத்தின்போது பேசிய யாழ்ப்பாணம் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டபோதுபிரதமர் இது பற்றி தான் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

யாழ் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன்மேலும் கூறியதாவது: உலகத்தில் எங்குமில்லாத வழக்கம் இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது பொதுவாகஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டால் விசாரணை நீதிமன்றத்தில் நடக்கும்.

குற்றத்தைப் புரிந்தவர் 3–ம் திகதி முன்பாக, அல்லது மதகுருமார் மூன்பாகத் தாங்கள் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்வார்கள். உலக வழக்கத்திற்கு மாறாக குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் குருமாரையே ஆயுதப் படையினர் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

எதையோ நினைத்துக் கொண்டு அரசு எதையோ நிலைநாட்ட விரும்புகிறது, இதன் மூலம் சட்டத்தை நிலை

(8–ம் பக்கம் பார்க்க)

★ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர்

## ஜனாதிபதி, அமைச்சர்களைக் கொன்று தலைகீழாகத் தொங்கவிடத் திட்டம்!

### வவனியாவில் ஜே. ஆர். தகவல்

(வவனியா நிருபர் ரி. விவேகராசா)

ஜனாதிபதி பிரதமமந்திரி, மற்றும் அமைச்சர்களையும் கொலை செய்வது மட்டுமல்ல அவர்களை மரங்களில் தலைகீழாகத் தொங்கவிடவும், ஜனாதிபதியின் குடலை மரத்தில் கட்டித்தூக்கவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் திட்டம் தீட்டியிருந்தனர்.

இந்தத் தகவலைநேற்று வவனியா நகரசபை முற்றவெளியில் நடந்த கூட்டத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன வெளியிட்டார்.

புலன் விசாரணைகளில் இந்த விபரங்கள் தெரியவந்திருப்பதாகவும் இவ்வாறு திட்டமிட்ட சுதந்திரக்கட்சிப்பிரமுகர்கள் மீது அடுத்த வாரம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட விரும்பதாகவும் திரு. ஜெயவர்த்தன கூறினார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று மு. ப. 11 மணிக்கு ஹெலிகொப்டர் விமானத்தில்வவனியா காமினி சிங்கள மகாவித்தியாலய முன்றலில் வந்திறங்கினார். அவரை வவனியா மாவட்ட அமைச்சர் திரு. ஜி. டி மகிந்தசோம, ஐ. தே. கட்சி அமைப்பாளர் திரு கா. த. புலேந்திரன், ஆகியோர் வரவேற்றனர். பின்னர் ஜனாதிபதி கார் பவனியில் நகரசபை முற்றவெளி மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டார், முற்றவெளி மகரதோரணங்களாலும் பச்சைநிறக் கொடிகளாலும் குலையுடனான வாழைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பச்சை ஓலையில் உருவாக்கப்பட்டிருந்த இலங்கைப்படத்தின் நடுவில் விளக்குச்சின்னம் அமைக்கப்பட்டிருந்தது.

நகரசபை மண்டப கட்டடத்திலும் ஏனைய பகுதிகளிலும் பலத்த பொலிஸ் ராணுவ பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(8–ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஏழாலை மயிலங்காடு, மல்லாகம் தெற்கு புன்னாலைக்கட்டுவன் வீதியில் ஸ்ரீமுருகன் பாடசாலைக்கு அண்மையில் 4¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: கு. தெய்வேந்திரம், தேத்தாவடை, ஏழாலை மேற்கு, ஏழாலை. 5295

புனரமைக்கப்பெற்று செய்யப்பட்ட ELF 350 பின்புறம் இரண்டு சக்கரங்கள் பொருத்தப்பட்ட லொறி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். முகாமையாளர் சி. எஸ். கே ஸ்தாபனம் திருமகள் அரிசி ஆலை காரியாலயம் 133, கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 5258

நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ஹொண்டா மோட்டர் சைக்கிள்கள் C/90, C/70 Delica வான்கள் 1979 மொடல் ELF டிரக்குகள் மலிவாகக் கிடைக்கும். நா. சாம்பசிவம் அன்கோ, 54, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம், T. P. 22454. (5218)

எங்களிடம் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'விளைவு கற்பூரம்' விற்பனைக்குண்டு கிருஷ்ணா றேடஸ், ஆஸ்பத்திரி வீதி, பெரிய கடை. யாழ்ப்பாணம். 5255

இருபாலை கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில், கோவில்தெரு ஒழுங்கையும் பருத்தித்துறை றோட்டும் முற்புறமாக அமைந்துள்ள 3 பரப்பு 3 குளி வெறுங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 17/2, ஸ்ரேசன் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6. (5263)

2படுக்கையறை, சுற்றுமதில், 2 1/2 பரப்பு காணியுடன் சேர்ந்த வீடு வளவு, நல்லூர் கந்தசாமி கோவிலிலிருந்து 1/4 மைல் தொலைவில், சச்சேரி நல்லூர் றோட்டில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும் விளம்பர இல. 5306, மே/பா., ஈழநாடு, யாழ்ப்பாணம். (5306)

150 வெற்று ஒயில் 'றம்ஸ்' கொள் அளவு 45 கலன் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாய விலையில் கிடைக்கும். தொடர்பு கொள்க: எரிபொருள் நிரப்பு நிலையம், வல்வெட்டித்துறை. 5282

யாழ். மருத்துவக் கல்லூரிக்கு அண்மையில் பொற்பதி வீதியில் வீடுகட்டுவதற்குகந்த 2½ பரப்புக்காணி கிணற்றுவசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: K இராகுலன், 3ம் கட்டை, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். 5283

3½ பரப்பு பனங்காணி கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு வடக்குப்பக்கமாக பலாலி மெயின் றோட்டுக்கு அருகாமையில் உண்டு. விபரங்களுக்கு திரு எஸ். கே. சபாபதி, முன்னைநாள் கி. ச. தலைவர், நவரட்ணராஜா றோட்டு, கோண்டாவில் மேற்கு, 5287

8 பரப்பு தோட்டக்காணி தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்குப் பின்னால் விற்பனைக்குண்டு. சந்திரகுமார், 'கௌரிவாசம்', புதிய செம்மணிறோட், நல்லூர் வடக்கு, நல்லூர். 5284

## விற்பனைக்கு

சாவகச்சேரி கண்டிவீதியில், ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் இரண்டு பரப்புக் காணியும் தேநீர் கடைக்குரிய சோக்கேஸ், தளபாடங்கள் யாவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். செ. யோகரத்தினம், கண்டி வீதி, சாவகச்சேரி, தொலைபேசி: 212. 5248

72/1, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியில் காசாளர் (Cashier) கவுண்ரர் 4' 6'' உயரம், 4' அகலம், 45 கலன் மண்ணெண்ணெய் 'றம்'மைப் ஸ்ராண்டுடன், வேறும் பல பொருட்களும் உண்டு. சு. சதாசிவம், 72/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5280

## தேவை

கற்பூர வில்லைகள் அடிப்பதற்கு பெண்பிள்ளைகள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். கிருஷ்ணா றேடஸ், ஆஸ்பத்திரி வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். 5256

திறமையும்அனுபவமுமுள்ள ரேடியோ ரெக்னீசியன் உடன் தேவை. தகுதிக்கேற்ப நல்ல சம்பளம் வழங்கப்படும். நேரிலோ, தபால்மூலமோ தொடர்பு கொள்ளவும் 'எலெக்ரோவொய்ஸ்', 85, கண்டி வீதி, கிளிநொச்சி. (5304)

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு சிற்றூழியர்கள் தேவை. வயது 18க்கும் 22க்கும் உட்பட, அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். விளம்பர இலக்கம்: 5225 ஈழநாடு மே/பா யாழ்ப்பாணம். 5225

தொழிற்சாலை வேலைகட்கு பெண்கள் உடனடியாகத் தேவை. 3 மைல் சுற்றுடலில் வசிப்போர் விரும்பத்தக்கது. பபி இண்டஸ்றீஸ், மகளிர்வித்தியாலய வீதி, சாவகச்சேரி. 5264

யாழ்நகரிலுள்ள பிரபல்யம் மிக்க சைவ ஓட்டலுக்கு சமையல்காரர், சப்ளையர்கள் உடன் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 5273, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (5273)

இரவு நேர வேலைகள் செய்வதற்கு நற்பண்புள்ள திறமைசாலிகள் தேவை. குடும்பத்துடன் தங்குவதற்கு வசதியும் செய்துகொடுக்கப்படும். விபுலானந்த அச்சகம், 248/5, கே. கே. எஸ். றோட், யாழ்நகர். (5292)

அனுபவமுள்ள 40 வயதிற்கு மேற்பட்ட கார் சாரதி உடனடியாக தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும் மு குமாரசாமி பிள்ளை, ஸ்ரோர்ஸ், 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (5293)

கைத்தறியில் நெசவு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. உடன் நேரில் வரவும். வசந்தபுரம் சில்க்ஸ், 75/11. பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (5299)

## வாடகைக்கு

பல்கலைக் கழகத்திலிருந்து நடந்துசெல்லும் தூரம் கொக்குவிலில் எல்லா நவீன வசதி கொண்ட வீட்டின் புறப்பான மூன்று அறை விருந்தை கொண்ட மிகவும் பாதுகாப்பான ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. கே. கே. எஸ். றோட் கொக்குவில், கோண்டாவில் புகையிரத நிலையங்களுக்கு அண்மையில், பல்கலைக்கழக மாணவிகள், உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு உகந்தது. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 5301, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 5301

பெரிய வியாபாரஸ்தாபனத்திற்கு உதவக்கூடிய (Company store Dispensary, Nursing-home, Tutory) உதவக்கூடிய மேல்மாடிக் கட்டிடமும், பலதரப்பட்ட வீடுகளும் வாடகைக்குண்டு. விபரம்: 19, கடைச்சாமி வீதி, வண்ணார்பண்ணை. போன்: 22335. (5297)

## பயிற்சி

வெளிநாடு செல்வதற்கும் நல்ல சம்பளம்பெறுவதற்கும், சிறந்த அச்சுத்தொழில் 3 மாதத்தில் பயிற்சி அளிக்கப்படும். ஆண், பெண், இருபாலாரும் எந்த வயதினரும் விண்ணப்பிக்கலாம், விபுலானந்த அச்சகம், 248/5, கே கே. எஸ் றோட், யாழ் நகர். 5291

விசேட ஒருமாத எலக்றிக்கல் வயரிங் பயிற்சி 01-12-82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5267

## விளம்பரம்

### வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 3500 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனையாகவுள்ளது. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களை முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 3-12-82 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்பாக சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குக்கான கேள்விப்பத்திரம்'' எனக்குறிப்பிடவும்.

கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா 500/- ஆகும்.

பொதுமுகாமையாளர்
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்.
5278

விற்பனையாகின்றன!
இறக்குமதி செய்யப்பட்ட
ஒட்டுப் பலகைகளும்
அழகிய தேக்கம்
முகப்புக்கதவுகளும்
வேண்டிய
அகல, உயரங்களில்
பெற்றுக் கொள்ளலாம்
இப்ராகிம் ஜபார்ஜி,
218, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
போன்: 22409

# தடை கோரிக்கை;

## விடுதலை அணி வியப்பு!

(யாழ்ப்பாணம்)

''தமிழ்ஈழ விடுதலை அணியைத் தடைசெய்யவேண்டுமென அரசுக்கு பாதுகாப்பு சபை கூறியிருப்பது குறித்து மிகுந்த வியப்பு அடைகிறோம்.''

இவ்வாறு தமிழ்ஈழ விடுதலை அணியின் மத்திய செயற்குழு தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

இது தொடர்பாக அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

''எமது இயக்கம் அறவழியிலும், காந்திய கோட்பாட்டிலுமே நம்பிக்கைகொண்டு, அதன் அடிப்படையில் செயல்ப்பட்டுவருகிறது.

''எமது இயக்கம் வன்செயல்களுக்குக் காரணமென்ற குற்றச்சாட்டை முற்றாக மறுக்கிறோம். தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ஈழ லட்சியத்திலிருந்து விலகி, உறவாடுவதின் வாயிலாக விடுதலைப் பயணத்தை இடைநிறுத்தியுள்ளது

''இந்நிலையை நீக்கி அரசுடன் ஒத்துழையாமை இயக்க மூலம் மக்களை விடுதலைப் பாதைக்கு எமது இயக்கம் அழைத்துச்செல்கிறது.''

## வாக்குமூலம் பதிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையக் கொள்ளை கொலை சம்பந்தமாக யாழ். குற்றப்பிரிவுப் பகுதியினரால் கைது செய்யப்பட்ட சிலரின் வாக்கு மூலம் சாவகச்சேரி நீதிபதி ஜனாப் எம் எச் காரியப்பர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(க)

## பொலிஸ் ராணுவ தகராறு சமரசதீர்வு!

(மன்னார்)

மன்னாரில் ஒரு பொலிசாருக்கும், ஒரு இராணுவ வீரருக்கு மிடையில் ஏற்பட்ட சச்சரவு சமாதானமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகளை தள்ளாடி இராணுவ முகாம் லெப்டினண்ட் திரு. ராஜபக்ச, மன்னார் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ்வரன் ஆகியோர் மேற்கொண்

[7-ம் பக்கம் பார்க்க]

## பாரதிமன்ற ஆண்டுவிழா


[மாவிட்டபுரம்]

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தினதும், பாரதி சனசமூக நிலையத்தினதும் 27-வது ஆண்டுவிழா இன்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற உள்ளது.

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத் தலைவர் திரு. இ. மு. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பரிசில்கள் வழங்குவார். யாழ். அபிவிருத்தி சபைதலைவர் திரு சு. நடராசா உட்பட மற்றும் பல பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். கருத்தரங்கு, கவியரங்கு, கலையரங்கு ஆகியன இவ்விழாவில் இடம்பெற உள்ளன.

யாழ்நகரில்
பலவகைப்
பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்
எண்ணம் போல்
வண்ணத் தெரிவுக்கு
பிரவுண்சன்
ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

சுண்டிக்குளியில் கண்டி றோட்டுக்கு அண்மையில் 2¼ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
விபரங்களுக்கு:
கா. ஞானேந்திரன்,
ரூபிவில்லா, வல்வெட்டித்துறை.
தொலைபேசி: 36 வல்வெட்டித்துறை (5302)

காரைநகர் சிவன்கோவில்
## கோபுரத் திருப்பணி

மேற்படி திருப்பணிக்கு இயன்ற பண உதவி செய்யுமாறு இறைவனடியார்களைக் கேட்டுக்கொள்கிறோம்.
நிதி உதவியை
கோவில் திருப்பணிச்சபைக் காரியாலயத்தில்
பொருளாளர் வே. சிவசுப்பிரமணியம்
உப பொருளாளர் சி. சிவலிங்கம் அவர்களிடம்
கொடுத்து றிசீற் பெற்றுக்கொள்ளவும்.
வங்கிக் கணக்கு 6814 இலங்கைவங்கி,
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
இங்ஙனம்
தலைவர்,
திருப்பணிச்சபை.
(4972)

# ஆசிய விளையாட்டுப் போட்டி:

# சீனா 97 பதக்கங்களைப் பெற்று முன்னணியிலுள்ளது!

## ஜப்பானுக்கு இரண்டாமிடம்!

### தமிழ்நாட்டைச்சேர்ந்தவருக்கு தங்கப்பதக்கம்

புதுடில்லி, நவ. 27

புதுடில்லியில் நடைபெற்றுவரும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப்போட்டியின் எட்டாவது நாளான நேற்று சீனா 42 தங்கப்பதக்கங்களையும், 32 வெள்ளிப்பதக்கங்களையும், 23 வெண்கலப்பதக்கங்களையும் மொத்தம் 97 பதக்கங்களைப் பெற்று தொடர்ந்து முதலாமிடத்திலுள்ளது.

ஜப்பான் 35 தங்கப் பதக்கங்களையும், 29 வெள்ளிப்பதக்கங்களையும். 20 வெண்கலப்பதக்கங்களையும் மொத்தம் 84 பதக்கங்களையும் பெற்று இரண்டாமிடத்திலுள்ளது.

வடகொரியா 10 தங்கப் பதக்கங்களையும், 15 வெள்ளிப் பதக்கங்களையும், 16 வெண்கலப்பதக்கங்களையும் மொத்தம் 41 பதக்கங்களைப்பெற்று மூன்ருமிடத்திலுள்ளது.

இந்தியா 9 தங்கப்பதக்கங்களையும், 6 வெள்ளிப்பதக்கங்களையும், 6 வெண்கலப்பதக்கங்களையும் மொத்தம் 21 பதக்கங்களைப் பெற்று நான்காமிடத்திலுள்ளது.

இப்போட்டியில் தமிழ்நாட்டைச்சேர்ந்தசார்ளஸ்புரூனே 800 மீட்டர் ஆண்களுக்கான ஓட்டப்போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஆசிய விளையாட்டுப்போட்டி நடைபெறும் மைதானத்தில் அமைக்கப்பட்ட 8 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டை வாங்குவதற்கு பலர் போட்டி போடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது, (வெ)




## றேயல்கடற்படைக் கப்பல்கள் இலங்கை வருகை

(கொழும்பு)

பிரிட்டிஷ் போர்க்கப்பலான எச். எம் எஸ். கலட்டியவும் துணைக்கப்பலான பிளம்லீவும் நாளை திங்கட்கிழமை கொழும்புக்கு வருகின்றன. நியூசிலந்து போர்க்கப்பலான கண்டர்பரியும் டிசம்பர் 2ந் திகதி வியாழக்கிழமை இவற்றுடன் சேர்ந்துகொள்ளும்.

மூன்று கப்பல்களையும் சேர்ந்த கோஷ்டி ஒன்று நவம்பர் 30ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணிக்கு, வெலிசறை கிரிக்கெட் மைதானத்தில் இலங்கை கடற்படையுடன் அரைநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் கலந்துகொள்ளும்.

டிசம்பர் முதலாம் இரண்டாம் திகதிகளில் மூன்று கப்பல்களையும் சேர்ந்த தொண்டர்கள் ருகமவுக்கு அருகே உள்ள தலகொல்ல சிறுவர் இல்லத்தில். சிறுவர் அறைகளைச் செப்பனிடும் சிரமதானப் பணியில் ஈடுபடுவர்.

கொழும்பு விஜயத்தை முடித்துக்கொண்டு கலட்டியவும் பிளமீலீவும் மொரிஷியஸ் தீவுக்கும் கண்டர்பரி சீஷெல்ஸுக்கும் செல்லும்.

## 'டிரக்' கவிழ்ந்து 18 பேர் பலி!

பெங்களூர், நவ. 26

கர்நாடக மாவட்டத்தில் 'டிரக்' ஒன்று கவிழ்ந்தமையால் 18 பேர் ஸ்தலத்திலேயே மரணமானுர்கள். 14 பேர் படுகாயம் அடைந்தனர். 4 பேர் மோசமான நிலையில் உள்ளனர்.

'டிரக்' கவிழ்ந்தமைக்கு 'டிரக்'கில் அளவுக்கு அதிகமான சர்க்கரை மூடைகளும், கடலை மூடைகளும், ஆட்களும் ஏற்றப்பட்டமையே காரணமாம். (உ)

## அகாலிகள் பிரச்னைக்கு தீர்வுகாண அரசு தயார்

### இந்திரா கூறுகிருர்

புதுடில்லி, நவ 27

''எவரையும் பாதிக்காத வகையில் அகாலிகள் பிரச்னைக்குத்தீர்வு காண அரசு தயாராகவுள்ளது. இதுதொடர்பாக பஞ்சாப் மாநிலத்திற்கு வெளியே வாழும் சீக்கியர்களின் கருத்துக்களையும் அறிய அரசு விரும்புகிறது''

இவ்வாறு இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி புதுடில்லியில் சீக்கியமதம் தொடர்பான புத்தகமொன்றைவெளியிட்டுவைத்து உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''அகாலிகள் பிரச்னைக்கு தீர்வுகாணும்போதும் ஏனைய மாநிலங்களின் நலன்களையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

''மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே எவ்வித பூசலும் இல்லை'' என்ருர்.

பஞ்சாப் மாநிலத்திற்கு சுயாட்சி வழங்கப்படவேண்டுமென்று கோரி அகாலிகள் கிளர்ச்சிசெய்துவருவது தெரிந்ததே.

புதுடில்லியில் நடைபெற்றுவரும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டியின் போது குழப்பம் விளைவிக்க முயன்ற அகாலிகள் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்







## இலங்கையில் சிறுபான்மை மக்கள் பிரச்னைகள் பற்றி

# பெரும்பான்மை சமூக ஸ்தாபனங்கள் அக்கறை காட்டுவதில்லை!

## குறைபாட்டைச் சுட்டிக்காட்டுகிறார் அமெரிக்கப் பெண்மணி

தேசிய ஒற்றுமைக்காக இலங்கையில் எடுக்கப்படும் நடவடிக்கைகள், சிறுபான்மை இனமக்களின் பிரச்னைகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கென அண்மையில் இலங்கைவந்திருக்கும் அமெரிக்காவைச் சேர்ந்தவரும், மனித உரிமைகள் இயக்கத்தைச்சேர்ந்தவருமான செல்வி ஆன் சௌமகெர் மட்டக்களப்பிற்கு வருகை தந்தபோது 'ஈழநாடு'வுக்கென அவரைச் சந்தித்தேன்.

கிராம அபிவிருத்தித் துறையில் விசேடபயிற்சிபெற்றுள்ள இவர் ஒரு பொருளியல்துறை சிறப்புப் பட்டதாரியாவார். ஒரு மாத கால விஜயத்தை மேற்கொண்டு கடந்த மாதம் இலங்கை வந்த தாம்இதுவரை மொறட்டுவ, அவிசாவளை, கேகாலை, யாழ்ப்பாணம்ஆகிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள தொண்டர் ஸ்தாபனங்கள், பொதுமக்கள் பலரையும் சந்தித்ததாக கூறும் இவர் கடந்த ஒருவார காலமாக மட்டக்களப்பிலுள்ள பல கிராமங்களுக்கும் சென்று அந்த மக்களின் சமூக வாழ்க்கை முறைகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள். இனப்பிரச்னைகள் தொடர்பான அவர்களின் எண்ணங்கள், தேசிய ஒற்றுமைக்கான வழிவகைகள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாக குறிப்பிட்டார்.

### எங்கும் பிரச்னை

உலகில் எங்குதான் பிரச்னை இல்லை. பல்வேறு இனங்கள் ஒன்றாக வாழும் ஒவ்வொரு நாட்டிலும்ஏதோ ஒரு பிரச்னை வெவ்வேறு வடிவங்களில் இனப்பிரச்னையாக உருவெடுக்கிறது. எப்பொழுதும் சிறுபான்மையாக இருக்கும் இனம் தாம் ஒதுக்கப்படுவதாக நினைப்பது இயற்கைதான். ஆனால் அந்த நினைப்பை மாற்றும் வகையில் பெரும்பான்மை சமூகம் சிறுபான்மை இனத்தை மதித்து வாழவேண்டும். எனக்குறிப்பிட்ட அவர் அளித்த பேட்டி வருமாறு:-

கேள்வி: அமெரிக்காவிலும் இனப்பிரச்னைகள் அடிக்கடி ஏற்படுவதுண்டா?

பதில்: ஆம் அங்கு கறுப்பு இனத்தவர்களுக்கும் வெள்ளை, இனத்தவர்களுக்குமிடையே பிரச்னைகள் ஏற்பட்டு இனக்கலவரங்களாக வெடிப்பதுண்டு. இரண்டு மனிதர்களுக்கிடையே ஏற்படும் ஒரு தனிப்பட்ட பிரச்னை அந்த இரு மனிதர்களும் இரு வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவை இனப்பிரச்னையாக உருப்பெற்று இனக்கலவரங்களாக வெடிக்கின்றன. பெரும்பாலான தனிமனிதப் பிரச்னைகளே இனப்பிரச்னைகளாக உருப்பெறுகின்றன.

கே: அமெரிக்காவில் அப்படி தனிமனிதப்பிரச்னைகளோ அல்லது இனப்பிரச்னைகளோ ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் என்ன என நினைக்கிறீர்கள்?

ப: சனத்தொகை அதிகரிப்பும், வேலையில்லாப்பிரச்னையும், இடநெருக்கடியும், போதை வஸ்துபழக்கங்களும் தான் இனப்பிரச்னையோ அல்லது தனிமனிதப் பிரச்னையோ ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் என நினைக்கிறேன். சன நெருக்கடியும்தான் அங்கு அடிக்கடி இனக்கலவரங்கள் ஏற்படுவதற்கு காரணமாகும். கறுப்பு இனத்தவர்கள் பலர் இங்கு வேலையின்றி இருக்கிறார்கள். கறுப்புஇனத்தவர்களுக்கு அங்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு தனியார் தொழில் நிறுவனங்கள் அவ்வளவு விரும்புவதில்லை. அமெரிக்காவில் 90% வேலை வாய்ப்புகள் தனியார் தொழில் ஸ்தாபனங்களில் தான் கிடைக்கிறது. இதனால் 16வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட கறுப்பர்கள் பலர் வேலையின்றி இருக்கிறார்கள்.

> "இலங்கையில் சிறுபான்மை இன மக்களின் பிரச்னைகள் தொடர்பாக பெரும்பான்மை இனமக்களின் பொது ஸ்தாபனங்கள் அவ்வளவு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இது ஒரு குறைபாடாகும்" என்று கருத்து வெளியிட்டார். இலங்கை வந்துள்ள மனித உரிமைகள் இயக்கத்தைச் சேர்ந்த அமெரிக்கரான செல்வி ஆன். சௌமகெர்.

கே: கறுப்பு இனத்தவர்களுக்கு வேலை வழங்க இந்த நிறுவனங்கள் மறுப்பதேன்?

### கறுப்பர் செய்யும் தவறுகள்

ப: கறுப்பு இன மக்கள் செய்யும் சில தவறுகளை சிலர் தொலைக்காட்சியில் படம் பிடித்துக்காட்டுகிறார்கள் இதனால் கறுப்பு இன மக்கள்மீது தொழில் அதிபர்களுக்கு நல்ல அபிப்பிராயம்இல்லை கறுப்பர்கள் கெட்டவர்கள், தீய பழக்கம் உள்ளவர்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள். கறுப்பு இன வர்க்கத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கஞ்சா, அபின் போன்ற போதை வஸ்துக்களை மாணவர்கள் அதிகம் பாவிக்கிறார்கள். இதனால் அடிக்கடி அங்கு அதாவது பாடசாலைக்கு பொலிசார் செல்லவேண்டியுள்ளது. அடுத்தது, கறுப்பு இனத்தவர்கள் அதிகம் படிப்பதில்லை அத்துடன் தொழில்நுட்ப அறிவும் இல்லை. இதனால் அதிகமானவர்கள் வேலைவாய்ப்பைப்பெற முடியாமல் இருக்கிறார்கள். அரசாங்கத்தில் தொழில்நுட்ப அறிவு குறைந்தவர்களையும், கல்வித்தரம் குறைந்தவர்களையும் போர்ப்படைக்குத்தான் சேர்ப்பார்கள். வெள்ளை இனத்தவர்கள் இதில் அதிகமானோர் சேர்கிறார்கள். ஆனால் கறுப்பு இன மக்கள் இந்த போர்த்தொழிலை அதிகம் விரும்புவதில்லை. இதனால்தான் கறுப்பு இன மக்களில் அதிகமானோருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது.

### பெரும்பான்மை மக்களின் குரல்

கே: கறுப்பு இன மக்களின் நல உரிமைகளுக்காக கறுப்பு இன மக்கள் இயக்க ரீதியாக ஏதாவதுபோராட்டம் நடத்துகிறார்களா?

ப: இப்பொழுது அவர்களின் இயக்கமொன்று அமெரிக்காவில் பலமான இயக்கமாக இருக்கிறது. அப்படி இருந்த போதிலும் கறுப்பு இன மக்களின் பிரச்னைகளுக்காக நல உரிமைகளுக்காக, அவர்கள் ஒடுக்கப்படுகின்றமைக்காக, குரல் கொடுப்பதற்கென வெள்ளை இன மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட இயக்கங்களும் குரல் கொடுக்கின்றன. ஒருநாட்டில் சிறுபான்மை இன மக்களின் பிரச்னைகளுக்காக, அவற்றைத் தீர்ப்பதற்காக, சிறுபான்மை இனங்களின் இயக்கங்கள் மட்டும் குரல் கொடுத்தால் போதாது. அந்த நாட்டிலுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இயக்கங்கள் குரல் கொடுக்கவேண்டும். உதாரணமாக அமெரிக்க கறுப்பு இன மக்களின் உரிமைகளுக்காக போராடிய மனித உரிமைகள் இயக்கத்தில் பெரும்பாலானவர்கள் வெள்ளை இனத்தவர்களே. பெரும்பான்மை இன மக்களிடமிருந்து மனிதாபிமான ரீதியில் குரல் ஒலிக்க வேண்டும். பெரும்பான்மை இன மக்களின் இயக்கங்களிலிருந்து சிறுபான்மை இன மக்களுக்காக குரல் ஒலித்தால்தான் அது பலமாக இருக்கும்.

கே: இந்தப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு [என்ன] அணுகு முறையை நீங்கள் விரும்புகிறீர்கள்?

ப; இனப்பிரச்னையைத்தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கைகளாக இருந்தாலும், அணுகு முறைகளாகஇருந்தாலும் அது மனித தன்மையுள்ள அணுகுமுறையாக இருக்கவேண்டும். பிரச்னைகள் தீர்வதற்கு இருசாராருக்குமிடையேயும் நல்ல அபிப்பிராயத்தையும் புரிந்துகொள்ளும் தன்மையும் நட்புறவையும் வளர்க்கவேண்டும். பிரச்னைகளை சுமுகமாக தீர்த்துவைக்கவேண்டும் என்ற நோக்கத்தை இரு சமூகத்திடமும் வளர்க்கவேண்டும் இரு பகுதியின் பிரச்னைகளையும் சகலரும் சரிவரப் புரிந்துகொள்ளவேண்டும். அமெரிக்காவைப்பொறுத்தவரை அங்கு இனப்பிரச்னையைத் தீர்க்க பல வழிகள் கையாளப்படுகின்றன. ஒரே மொழியை, ஒரே சமயத்தை ஒரே கலாச்சாரத்தைப் பேணுவதால் அங்கு ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒன்றாக ஒற்றுமையாக வாழும் சூழ்நிலைகள் உருவாகின்றன. கலப்புத் திருமணங்கள்கூட அங்கு நடக்கின்றன.

சந்திப்பு — நமது மட்டக்களப்பு நிருபர்
**இரா. துரைரத்தினம்**

கே: இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்றிருக்கிறீர்கள். தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை நீங்கள் சந்தித்திருக்கிறீர்கள். இலங்கையில் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழிவகைகள் என்ன என்று கூறுவீர்களா?

ப: இலங்கையில்சிறுபான்மை இன மக்களின் பிரச்னைகள் தொடர்பாக பெரும்பான்மை இன மக்களின் பொது ஸ்தாபனங்கள் அவ்வளவு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை ஒரு நாட்டின் சிறுபான்மை இன மக்களின் பிரச்னைக்காக அந்தநாட்டின்பெரும்பான்மை இன மக்களின் இயக்கங்கள் குரல்கொடுக்கவேண்டும். அப்படிக் குரல்கொடுக்கும்பட்சத்தில்தான் அந்தப் பிரச்னைக்கான தீர்வை நாம் விரைவில் எதிர்பார்க்கமுடியும். ஆனால் இலங்கையில் இந்த நிலை உருவாகாமை ஒரு குறைபாடாகும். சிறுபான்மை மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு பெரும்பான்மைஇன மக்களின் இயக்கங்கள்முன்வரவேண்டும். இலங்கையில் பெரும்பான்மை சமூகங்கள் வாழுகின்ற அவிசாவளை, கேகாலை, மொறட்டுவ போன்ற பகுதிகளுக்கும் போயிருக்கின்றேன். ஆனால் சிறுபான்மை இன மக்கள்வாழ்கின்ற யாழ்ப்பாணத்திற்கு சென்றபோது அங்கு நான் செல்லும் வாகனத்தை படைவீரர்கள் சோதனையிட்டார்கள். எங்கோ போருக்குசெல்பவர்கள்போல் எங்கும் ஆயுதம் தாங்கிய படைகளைக்கண்டேன். இத்தகைய நடவடிக்களே அந்தப் பகுதி மக்களின் மனங்களில் ஒரு பயத்தை அல்லது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

இது தன் மனத்தைக்கூட மிகவும் பாதித்திருப்பதாகக் கூறும் செல்வி. ஆன்சௌமகெர் அவர்கள் ஈழத்தமிழர்களின் பிரச்னைகளை எவ்வளவு ஆழமாக உன்னிப்பாக கவனித்திருக்கிறார் என்பதை அவருடன் சில மணி நேரம் உரையாடியதில் இருந்து புரிந்து கொண்டேன்.

இறுதியாக, இலங்கையின் சமய வழிபாட்டு முறைகள், கலாச்சார பண்பாடுகள் பற்றிக் குறிப்பிடும் பொழுது இந்து ஆலயங்களில் நடைபெறும்பூஜைவழிபாட்டுமுறைகளை என்றும் மறக்க முடியாது என்றார்.

இந்து ஆலயங்களில் நடைபெறும் பூஜை வழிபாட்டு முறைகளும், அங்கு காணப்படுகின்ற சிற்ப ஓவியங்களும் கலாச்சார பண்பாட்டு முறைகளும் அங்கு செல்லும் ஒவ்வொருவருக்கும் பக்தியை மட்டுமல்ல கலாரசனையையும் ஊட்டுவதாக இருக்கிறது எனக்குறிப்பிட்டார்.

---

## "வாழ்க்கை அலைகள்"



வாழ்க்கை அலைகள் என்ற பெயரில் சுப்பர் 8 எம். எம். முழுநீள வர்ணத் தமிழ்ப்படமொன்றை என். எஸ். நாராயணசாமி என்பவர் தயாரித்து வருகிறார். முடிவடையும் தறுவாயிலுள்ள இப்படத்தின் முழுப் பொறுப்புக்களையும் அவரே ஏற்றுள்ளார்.

விசேட அமைப்புகளின்றி இயற்கையான சூழலில் புதிய நடிகர்களை கலந்து எடுக்கப்பட்டுவரும் இப்படம் ஆங்கிலப்படங்களைப்போல் இருக்குமாம். காலஞ்சென்ற இலங்கை நடிகர் (டிங்கிரி) சிவகுரு முக்கிய ஹாஸ்ய பாகத்தில் நடித்துள்ளார் சில காட்சிகளை இந்திய நடிகர்களையும் இணைத்து படப்பிடிப்பை முடிக்கத் தயாரிப்பாளர் எண்ணியுள்ளார்.

திரு நாராயணசாமி கெமராதிருத்தும் நிபுணராக இருந்து பின் ஜெர்மனியில் சினிமாத்துறைபற்றி பயிற்சிபெற்று இலங்கை திரும்பியவர்.

டிங்கிரி சிவகுரு, பூபதி ஆகியோர் தோன்றும் காட்சியை இங்கு காணலாம்.

---

## சென். ஜேம்ஸ் ஆலயத்தில் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு சத்தியாக்கிரகமொன்றை நடத்தவுள்ளது.

இச்சத்தியாக்கிரகம் எதிர்வரும் 30ந் திகதி காலை யாழ்ப்பாணம் சென் ஜேம்ஸ் ஆலயத்தில் இடம்பெறும்.

மதகுருமாரையும், விரிவுரையாளர்களையும் விடுதலைசெய்யும்படியும், வேலைநிறுத்தக்காரர்களுக்கு மீண்டும் வேலை வழங்கும்படியும் அரசைக் கோருவதே இம்மாபெரும் சத்தியாக்கிரகத்தின் நோக்கமென்று தெரிவிக்கப்பட்டது.

(கி)

---

## பிரதமரின் மட்டக்களப்பு விஜயம்

[மட்டக்களப்பு]

பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கென பிரதமர் ஆர். பிரேமதாசா அடுத்த மாதம் 14ந் திகதி மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

அன்றைய தினம் கல்குடா, பட்டிருப்பு, மட்டக்களப்பு ஆகிய தொகுதிகளில் ஐ. தே. கட்சியின் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு பிரசாரக் கூட்டங்களில் பிரதமர் உரை நிகழ்த்துவார்.

இதற்கான சகலஏற்பாடுகளையும் மட்டக்களப்பு மாவட்ட ஐ தே கட்சி கிளைகள் மேற்கொண்டுள்ளன.

## "தமிழ்த் தலைவர்கள் பாராளுமன்ற ஆசனங்களுக்கு ஆசைப்படாது தமிழீழ விடுதலைக்கு போராடவேண்டும்"

### இரா. வாசுதேவ கூறுகிறார்

(மட்டக்களப்பு)

தமிழ் தலைவர்கள் இனியும் பாராளுமன்ற ஆசனங்களுக்காக ஆசைப்படாது தமிழீழ விடுதலைக்காக போராட முன்வரவேண்டும் என்று தமிழீழ விடுதலைக் கழகத்தின் அமைப்புச் செயலாளர் திரு. இரா. வாசுதேவா மட்டக்களப்பில் தெரிவித்தார்.

சுளுதாவளை என்னுமிடத்தில் தமிழீழ விடுதலைக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே திரு. இரா. வாசுதேவா மேற்கண்டவாறு தெரிவித்தார்

தமிழீழவிடுதலைக்கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் திரு. யோகன் கண்ணமுத்து தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. இரா. வாசுதேவா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: தமிழ் இளைஞர்களையும், தமிழீழ விடுதலைப் போராளிகளையும், சிங்கள ஸ்ரீலங்காவின் துன்புறுத்தலுக்கு ஆளாகிவரும் தமிழ் அகதிகள் மீது அன்பு காட்டும் கத்தோலிக்க மதகுருமார்களையும் கைது செய்து பயங்கரவாதச் சட்டத்தின் மூலம் அவர்களை மக்கள் மத்தியில் குற்றவாளிகளாகக் காட்டுவதன் மூலமோ அவர்களை துன்புறுத்துவதன் மூலமோ தமிழீழ மக்களின் விடுதலை உணர்வை அழிக்க முடியாது.

இந்த நாட்டில் ஜனநாயகம், தார்மீகம் என்று உதட்டளவில்தான் பேசப்படுகிறதே தவிர சர்வாதிகார பாஸிஸ ஆட்சியே நடைபெறுகிறது என்பதை தமிழீழ மக்கள் உணர்வார்கள். உலகநாடுகள் உணரும். இலங்கையில்என்றோ ஜனநாயகம் செத்துவிட்டது.

பாஸிஸ, சர்வாதிகார ஆட்சி நடைபெறும் நாடுகளைப்போலவே இங்கும் சர்வாதிகார வெறி தலைதூக்கியுள்ளது. பயங்கரவாதச் சட்டத்தின்மூலம் நீதியைக்கொலை செய்து அநியாயமாக தமிழ் இளைஞர்களையும், மதகுருமார்களையும், தமிழீழ விடுதலைப் போராளிகளையும் அழிப்பதற்கு திட்டமிட்டு செயல்பட்டு வரும் இந்த நடவடிக்கைகளின் மூலம் எமது விடுதலை உணர்வை அழிக்க முடியாது. எம்மைச் சிறைக்கூடங்களில் அடைத்து வைப்பதன் மூலமோ ஆயுதப் படையினரைக் கொண்டு எம்மைத் துன்புறுத்துவதன் மூலமோ எமது போராட்டத்தைக் கைவிடுவோம் என அடக்குமுறை அரசாங்கம் பகற்கனவு காண்கிறது. எம்மை சிறைக்கூடங்களில் அடைத்து வைப்பதன் மூலம் எமது கைகள் தான் பலப்படுகிறதே தவிர பலவீனப்படவில்லை.

இந்த நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் இருப்பதாகச்கூறிக் கொள்ளும் இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் குரல்கொடுக்கும் சுதந்திரன் பத்திரிகைக்கு ஆப்பு வைத்ததேன்?

ஜனநாயக அடிப்படையில் வெகுஜன ரீதியில் மக்களைத் திரட்டி விடுதலைக்காக போராட்டம் நடத்த நினைக்கும் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதேன்?

ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்தை கண்டிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தும் தமிழ் பேசும் மக்களுக்கு அந்த உரிமை அளிக்கப்படவில்லை. ஜனாதிபதி தேர்தலில் அரசாங்கத்திற்கு எதிராக துண்டுப் பிரசுரம் வெளியிட்ட தென்னிலங்கை அரசியல்வாதிகள் கைது செய்யப்படவில்லை. நீதிமன்றத்தில் நிறுத்தப்படவில்லை சிறைக் கூடங்களில் அடைத்து வைக்கப்படவில்லை. ஆனால் தமிழ் இளைர்கள் துண்டுப்பிரசுரம் வெளியிட முனைந்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்கள். சிறைக்கூடங்களில் அடைத்து வைக்கப்பட்டார்கள். இந்நாட்டில் தமிழ்இனம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகின்றமை சிங்கள ஸ்ரீலங்கா ஆட்சியின் கீழ் தமிழ்ஈழம் இருக்கும்வரை தொடரும் சங்கதிதான்.

தமிழீழ விடுதலை என்பது பாராளுமன்றத் தேர்தல்களின் மூலமோ, பாராளுமன்றத்திற்கு பிரதிநிதிகளை தெரிவு செய்வதன் மூலமோ, கிடைக்கப்போவதில்லை. பாராளுமன்றத்திற்கு அப்பால் தமிழ் மக்களின் ஒன்றிணைந்த போராட்டத்தின் மூலமே தமிழீழ விடுதலையை பெறமுடியும். தமிழ் தலைவர்கள் இனியும் பாராளுமன்ற ஆசனங்களுக்காக ஆசைப்படாது தமிழ்ஈழ விடுதலைக்காக போராட முன்வர வேண்டும் என்றார். (க)

## "சீதனக் கொடுமை, சாதிவேற்றுமை: இளைஞர்கள் ஒழிக்க வேண்டும்"

### பாரதி விழாவில் உ. அ. அதிபர்

(கரவெட்டி)

"பாரதிவிழா இன்று நாடு பூராவும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் பாரதியின் போதனைகள் கருத்துக்கள் கடந்த பல ஆண்டுகளாக மேடைக்கு மேடை கூறிவந்த போதிலும் இன்னமும் அக்கருத்துக்கள் நடைமுறைக்கு வரவில்லை" என்று கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை கரணவாய் தெற்கு அண்ணாசிலையடி இளைஞர் மறுமலர்ச்சிக்கழகத்தின் பாரதி நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கரணவாய்தெற்கு கலட்டிப் பிள்ளையார் கோவிலடியில் நடந்த இவ்விழாவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயாத்துரை தொடர்ந்து பேசுகையில் பாரதி தேசிய விடுதலை, நாட்டுவிடுதலை, இனவிடுதலை, ஏற்றத்தாழ்வின்மை, பெண்கள் சுதந்திரம், பொருளாதார முன்னேற்றம் என்பனபோன்ற சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவையான கருத்துக்களைப் போதித்துள்ளார். ஆனால் இன்றுவரை சீதனக்கொடுமையோ, சாதி வேற்றுமையோ தீர்ந்தபாடில்லை எனவே இவற்றை அகற்றுவதில் இளஞ்சந்ததியினர் முக்கியமாக வாலிபர்களும் யுவதிகளும் மிகவும் தீவிரமாகப் பங்குகொண்டு செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு. க. சிவானந்த மூர்த்தி உட்படப் பலர் விழாவில் உரையாற்றினர்.

### மினிபஸ் உரிமையாளர்

## சங்கத் தலைவருக்கு யாழ். அரச அதிபர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றபோது 53 மினி பஸ் வண்டிகளை கொடுத்துதவிய, வடபிராந்திய மினிபஸ் வண்டிகள் உரிமையாளர் சங்கத்தலைவர் திரு ஏ. பி. ஏ. வாசுவைப் பாராட்டி, யாழ். அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

"ஜனாதிபதி தேர்தலின் போது வாக்கெடுப்பு நிலையங்களில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களையும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் உபகரணங்கள் காகிதாதிகள் ஆகியனவற்றையும் எடுத்துச் செல்வதற்காக அதிக எண்ணிக்கையை உடைய மோட்டார் வாகனங்கள் பாவிக்கவேண்டி ஏற்பட்டது.

"வடபிராந்திய போக்குவரத்துச்சபை, எனக்குத் தேவையான வாகனங்களைப் பெற்றுத்தரமுடியாமல்இருந்ததால் உங்களால் பெற்றுத்தரக் கூடிய மினி பஸ் வண்டிகளைப் பெற்றுத்தருமாறு உங்களிடம் கோரிக்கொண்டேன்.

"எனதுகோரிக்கைக்கிணங்கி மேற்படிவாக்கெடுப்பின்போது 53 மினி பஸ் வண்டிகளைப் பெற்றுத்தந்த உங்களுக்கு எனது நன்றியைச் செலுத்தும் வேளையில் இது தொடர்பாக உங்கள் ஒத்துழைப்பை மிகப் பெறுமதியானதாக கருதுகின்றேன்.

"எதிர்காலத்திலும் இது போன்றஉங்கள்ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன் என்பதனைக் குறிப்பிட விரும்புகின்றேன்". [மா]

## பிரான்ஸ் - இந்திய ஒப்பந்தம்

புதுடில்லி, நவ. 27

தாராப்பூர் அணு மின்சார நிலையத்திற்கு யுரேனியத்தை வழங்கும் ஒப்பந்தமொன்றில் பிரான்சும், இந்தியாவும் கைச்சாத்திட்டுள்ளன. (வெ)

## விசேட தீப சுமங்கலி பூசை

(யாழ்ப்பாணம்)

வண்ணை வீரமாகாளி அம்மன்கோவிலில் இம்மாதம் 30ம் திகதி இரவு விசேட சுமங்கலி பூசை, தீப பூசை, திருக்கார்த்திகை உற்சவம் ஆகியன நடைபெறவிருக்கிறது. (க)

## இன்று மன்னாரில் உண்ணாவிரதம்

[மன்னார்]

வடபகுதியில் பொலிசாரினாலும், இராணுவத்தினராலும் கைதுசெய்யபபட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மதகுருமார்களை விடுதலைசெய்யுமாறு கோரி இன்று பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும்

இவ்வுண்ணாவிரதத்தில் பேசாலையைச் சேர்ந்த பொதுமக்களும், மாணவர்களும் கலந்து கொள்வார்கள்

இதேபோல் எதிர் வரும் 30-ஆம் திகதி மன்னார் புனித சவேரியார் ஆலயத்திலும் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும. (க)

## பொதுஜன வாக்கெடுப்பு: மட்டக்களப்பில் கருத்தரங்கு; பிரசாரக் கூட்டம்

(மட்டக்களப்பு)

பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு பிரசாரக் கூட்டங்களையும். கருத்தரங்குகளையும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல கிராமங்களிலும் நடத்துவதற்கான முயற்சிகளில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யூ தேவநாயகமும், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையும் ஈடுபட்டுள்ளனர்.

கல்குடாத் தொகுதியில் பிரசார வேலைகளை மேற்கொள்வதற்கான முயற்சியில் அமைச்சர் தேவநயகம் அண்மையில் கல்குடாத் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி கிளைகளின் பிரமுகர்களை அழைத்து பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்ததுடன், கல்குடாத் தொகுதிலுள்ள சகல கிராமங்களிலும் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு தொடர்பாக விளக்குவதற்கு கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்யுமாறு பணித்துள்ளார்.

இதேபோன்று பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரை தமது இல்லத்தில் மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள ஆதரவாளர்களை அழைத்து பொதுஜன வாக்கெடுப்புத் தொடர்பாக விளக்கி கூறியதுடன் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பை ஆதரித்து பிரசாரம் செய்யுமாறும் கேட்டுள்ளார்.

### குட்டிமணி மீதான விசாரணை டிச. 10-ல்

## சட்டமா அதிபர், சிறை ஆணையாளர் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதி எம்.பி. யாக தெரிவாகியுள்ள குட்டிமணி என்றழைக்கப்படும் செல்வராசா யோகசந்திரனை பாராளுமன்றம் சென்று சத்தியப்பிரமாணஞ் செய்ய அனுமதிக்கும்படி சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிடக்கோரும் மனு டிசம்பர் 10ந்திகதிவிசாரணைக்கெடுக்கப்படும்.

சட்டத்தரணி எஸ் நவரத்தினம் மனுதாரர் சார்பில்மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று ஆஜராகியிருந்தார். இம்மனுவை வட்டுக்கோட்டைத் தொகுதி வாக்காளர் ஐ. சங்கர் தாக்கல் செய்திருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் திரு. ஆனந்தஜி டி. சில்வா, திரு. கே. அபேவர்த்தன, திரு. ஜி பி. எஸ். டி. சில்வா ஆகியோர் இம்மனு மீது விசாரணைகளை ஆரம்பித்தனர்.

டிசம்பர் 10-ல் இம்மனுமீண்டும் விசாரணைக்கெடுக்கபபடும் என நீதிபதிகள் தெரிவித்ததுடன் அன்றையதினம் சட்டமாஅதிபரையும், சிறைச்சாலை ஆணையாளரையும் ஆஜராகுமாறும் உத்தரவிட்டனர்.

## சிறுமி துன்புறுத்தல் தொடர்பாக விசாரணை !

(மாவிட்டபுரம்)

யாழ்ப்பாணத்திலுள்ள வீடொன்றில் 12 வயதுச் சிறுமியொருத்திக்கு நேர்ந்த துன்புறுத்தல் தொடர்பாக மல்லாகம் நீதிமன்ற நன்னடத்தைப் பாதுகாவல் அதிகாரி விசாரணை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் எஸ் யோகேஸ்வரன் என்பவரது வீட்டில் வேலைக்கிருந்த மாலா என்னும் 12 வயதுச் சிறுமி அங்கு இடம்பெற்ற துன்புறுத்தல் காரணமாக அங்கிருந்து புறப்பட்டு மருதனுமடம் சந்தியில் அநாதரவாக நின்ற சமயம் சுன்னாகம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

அச்சமயம் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் இச்சிறுமியை கைதடி இரட்சணிய சேனையில் அனுமதித்து இவருக்கு நேர்ந்த கதி பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி மல்லாகம் நீதிமன்ற நன்னடத்தை பாதுகாவல் அதிகாரி திரு. ச. தர்மபாலனுக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து திரு, தர்மபாலன் மேற்படி சிறுமிக்கு நேர்ந்த கதி பற்றி விசாரணை மேற்கொண்டுள்ளார்.

மருதானையைச் சேர்ந்தவரெனக் கூறப்படும் இச்சிறுமியின் பெற்றோரது விபரங்களை அறிவதுடன் சிறுமி வேலைக்கிருந்த வீட்டுக்காரரையும் விசாரணை செய்ய அவர் நடவடிக்கை எடுத்துள்ளார்

டிசம்பர் 2-ந் திகதி இச்சிறுமி மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார். (க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்:23199 தந்தி; வைரம்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

# ஆசிரியர் சம்பளம் கொள்ளை: 3 இளைஞர்கள் விசாரணையில்

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் சம்பளப்பணம் கொள்ளையைத் தொடர்ந்து வடலியடைப்பு, பண்டத்தரிப்பு பகுதியில் பலத்த தேடுதலில் இராணுவத்தினர் ஈடுபட்டுவருகின்றனர். சந்தேகத்தின் பேரில் மூன்று வாலிபர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்

இராணுவத்தினர் கல்லூரிக் காரியாலயத்தைக் காவல் செய்து வருகின்றனர். கைவிரலடையாள நிபுணர்கள் வருகையைத் தொடர்ந்து: இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது. ஆசிரியர் சம்பளம் கொள்ளையடிக்கப்பட்டதை வடபகுதி கல்விப் பணிப்பாளருக்கும், ஏனைய அதிகாரிகளுக்கும் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில்

## கூட்டுறவு, தனியார் அமைப்புகள் திறமாகச் செயல்படுகின்றன

### உலக வங்கி நிபுணர்கள் இப்படிப் பாராட்டியுள்ளனராம்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தித்திட்டங்கள் செயல்படுத்தக்கூடிய அமைப்புகள் அடங்கியிருப்பதாகவும் கூட்டுறவு தனியார் நிர்வாக அமைப்புகள் மிகவும் திறமையாக இருப்பதாகவும் உலக வங்கி நிபுணர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர்கள் திரு. பி. எல். பற்றிக், திரு. ஜே. குலநாயகம், யாழ். மாவட்ட மந்திரி இணைப்புச் செயலாளரும், பிரதேச அபிவிருத்தி அமைச்சின் பிரதிப்பணிப்பாளருமான திரு எஸ். பி. பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திட்டமிடல் பணிப்பாளர் திரு. சிவதாசன் மேலும் தெரிவிக்கையில்' உலகவங்கியில் பொருளாதார நிபுணத்துவம் வாய்ந்த நால்வர் திரு. ஓ. கே. நட்சன் தலைமையில் யாழ். மாவட்டத்துக்கு வந்து அபிவிருத்தித் திட்டங்களைப்பார்வையிட்டுள்ளனர்.

''இந்த நிபுணர்கள் கால்நடை பால் பண்ணைகள் அபிவிருத்திகளை பார்வையிட்டு மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்தனர். யாழ். திருநெல்வேலி பாற்பண்ணை, கோழிஉணவு தயாரிக்கும் நிலையம் ஆகியன இயங்கிவருவதை அந்த நிபுணர்கள் பாராட்டினர். கிளிநொச்சியில் ஒரு கோடி 12லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட பால் சேகரிக்கும் நிலையத்தையும் அவர்கள் பார்வையிட்டனர்'' என்று தெரிவித்த திட்டமிடல் அதிகாரி, இந்த நிலையம் தைமாதம் திறக்கப்படவுள்ளதாகவும் சொன்னார்.

இங்குள்ள அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுவதையிட்டு, திருப்தியடைந்த நிபுணர்களில் இருவர் மேலும் சிலநாட்கள் தங்கிநின்று கவனிக்கப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிராமிய கைத்தொழில் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் அழைப்பின்பேரில் இலங்கைக்கு வந்த இந்த நிபுணர்களை, யாழ். மாவட்டத்துக்கும் அனுப்பிவைத்தவர், அமைச்சர் தொண்டமான் அவர்களே என்றும் திரு. சிவதாசன் சொன்னார்.

இவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா, அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோரையும் சந்தித்து உரையாடியதாகவும் அவர் சொன்னார்.

கிராமியத்தொழில் அமைச்சைச்சேர்ந்த திரு. ஏ. சத்திவேலுடன் வந்த நிபுணர்கள், கால்நடை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சக்திவேலுடன் கால்நடைப் பண்ணைகளுக்கும் சென்று பார்வையிட்டனர். (மா)

## பாரதிகருத்தரங்கில் வெளிநாட்டு பிரதிநிதிகள்

சென்னை நவ. 27

பாரதி நூற்றுண்டையொட்டி தமிழ் நாட்டில் அடுத்த மாதம் 3ம், 4ம் திகதிகளில் நடைபெறும் கருத்தரங்குகளில் பிரான்ஸ், சோவியத்யூனியன், சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதி நிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# 'மதகுருமாரைவிடுதலைசெய்க'

## தமிழ்க்காங்கிரஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மதகுருமாரை உடனடியாக விடுதலைசெய்து நீதிமன்றமூலமாக செயற்படுவதேயன்றி தற்போது கையாளும் முறையை வன்மையாகக் கண்டிப்பதென தமிழ் காங்கிரஸ் செயற்குழு தீர்மானித்துள்ளது

தமிழ் காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தில் உப தலைவர் திரு. என். ரி சிவஞானம் தலைமையில் நடந்த கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

மத குருமாரை இராணுவத்தினர் கைதுசெய்துவைத்திருப்பது தொடர்பாக யாழ் ஆயர் அதி வண. தியோகுப்பிள்ளை ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் விடுத்த கோரிக்கையை பூரணமாக ஆதரித்து, அதன் பிரகாரம் மதகுருமாரை உடனடியாக விடுதலைசெய்து நீதிமன்றம்மூலமாக செயற்படுவதேயன்றி தற்பொழுது கையாளும் முறையை வன்மையாக அத காங்கிரஸ்செயற்குழு கண்டித்துள்ளது.

இதுவிஷயமாக யாழ். ஆயரும் மத ஸ்தாபனங்களும், பொதுசன இயக்கங்களும் எடுக்கும்நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதெனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. (மா)

## பாக் - இந்திய கிரிக்கெட்டெஸ்ட்

இஸ்லாமாபாத் நவ. 27

பாகிஸ்தானுடன் ஆறு கிரிக்கெட்டெஸ்ட் பந்தயங்களில் விளையாடுவதற்காக இந்திய கிரிக்கெட் குழு திரு. சுனில்கவாஸ்கரின் தலைமையில் பாகிஸ்தான் சென்றுள்ளது.

'' இப்போதைய இந்த டெஸ்ட் தொடர் மிகவும் பரபரப்புடையதாக விருக்கு'' என்று இந்திய கிரிக்கெட் குழுவின் காப்டன் சுனில் கவாஸ்கர் கராச்சியில் நிருபர்களிடம் தெரிவித்தார். (வெ)

## பெரியகுளம் தேர்தல்: 'ரிட்மனு' தாக்கல்

சென்னை, நவ. 27

கடந்த செப்டம்பர் மாதம் 26-ம் திகதி நடைபெற்ற பெரியகுளம் லோகசபா இடைத்தேர்தலில் அ. தி. மு. க.வைச் சேர்ந்த திரு. ஜக்கப்பன் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாதென்று நீதிமன்றத்தில் 'ரிட் மனு' தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த தி. மு. க. வேட்பாளர் திரு' கம்பன் ராமகிருஷ்ணனே இந்த 'ரிட்மனு'வைத் தாக்கல் செய்துள்ளார். (வெ)

தமிழ்நாடு

## சட்டப்பேரவை உறுப்பினர் ஆதித்தன் காலமானர்

சென்னை, நவ. 27

அ. தி. மு. க வைச்சேர்ந்த திருச்செந்தூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. கேசவ ஆதித்தன் கார் விபத்தொன்றின்போது மரணமானர். இறக்கும்போது இவருக்கு 49 வயதாகும்.

இவர் சென்றுகொண்டிருந்த கார் மதுரையில் லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானபோது காயமடைந்த இவர் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்சப்பட்டு, நேற்று அங்கு காலமானர்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரன், தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி ஆகியோர் இவரின் மறைவுகுறித்து அனுதாபம் தெரிவித்துள்ளனர். (வெ)

நத்தார் - புத்தாண்டு வைபவங்கள் சிறப்புற

★ எவர்சில்வர் பொருட்கள் ★ மின்விசிறிகள் ★ றேடியோக்கள்
★ மணிக்கூடுகள் ★ திருமணம் மற்றும் வைபவங்களுக்கான
★ வெடிங்காட் ★ பேப்பர் றே கப் ★ கரண்டிகள்
★ மின்சார உபகரணங்கள் ★ பாடசாலை உபகரணங்கள்
★ சி. ஐ. சி. கெமிபிக்ஸ் ★ பைன்டிங் கம் ★ காகிதாதிகள்

அனைத்திற்கும்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கைத் தேசிய கடதாசிக் கூட்டுஸ்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகள் - மின்சார ஒப்பந்தகாரர்கள்)

(கடைத்தெரு பிள்ளையார்கோவில் முன்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24291

தலைமையகம்:

பேர்ள் லைட்ஸ் அம்பலவாணர் அன் சன்ஸ்

78, மலிபன் வீதி, கொழும்பு 11. போன்: 24821 — 28244

லெட்சுமிபவான், 97, ஒல்ஹேட் மாவத்த, கொழும்பு 11. போன்: 248[illegible]1

உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி

★ நம்பிக்கை ★ நாணயம் ★ அனுபவம்
முதலீட்டிற்கு இவை உத்தரவாதம்

ஷப்ரு யூனிகோ பினன்ஸ் லிமிட்டெட்

நிதி ரீதியான உதவிகள் :

★ உங்களுக்கு வர்த்தக விவசாயத்துறையிலும், வாகனங்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்ய உதவும் விதமாகவும் வாடகை கொள்வனவு நிதி உதவி வழங்கியும்
★ வீடமைப்பு, விவசாயம், கைத்தொழில், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் ஆகியவற்றிற்கு நிதி ஏற்பாடு செய்து கொடுத்தும்,
★ நீங்கள் விற்கவிருக்கும் காணிகள், வீடு வளவுகள் ஆகியவற்றை எதுவித சிரமமின்றி நிதானமாக நல்ல விலைக்கு விற்றுத்தருவோம்.
★ ரி. வி. (கலர்), குளிர்சாதனப்பெட்டிகள், மின்விசிறிகள், மோட்டார் சைக்கிள் முதலியன உடன் விலைக்கும் அல்லது தவணைமுறை அடிப்படையிலும் பெற்றுக்கொள்ள வசதியுண்டு.

வேறும் தேவைகள் எதுவானாலும் எப்பொழுதும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

SHABRA UNICO FINANCE LTD.

(இலங்கை மத்தியவங்கியின் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

தலைமை அலுவலகம் :
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி : 589310

யாழ்ப்பாண காரியாலயம்
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## இறை வழிபாட்டில் கலந்து கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழ விடுதலை அணித் தலைவர் டாக்டோ எஸ் ஏ தர்மலிங்கமும், அமைப்புச் செயலாள் திரு. ஈழவேந்தனும் நேற்று அடைக்கலமாதா ஆலயத்திலும், யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியினும் மதகுருமார்களின் விடுதலைக்காக நடத்தப்பட்ட இறைவழியாட்டில் கலந்துகொண்டனர். [த]

29-11-82 வரை
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
தில்லுமுல்லு

மனோகரா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(வயதுவந்தவர்க்கு)

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
DRAGULA
Action - Horror

## பிடிவிருந்துக்கு 6 தடவை தப்பியவர்; 7-வது தடவைசிக்கினர்!

(மாவிட்டபுரம்)

6 தடவை நீதிமன்றத்தினல் பிறப்பிக்கப்பட்ட பிடிவிருந்துக்குத் தப்பி தலைமறைவாக இருந்த நபர் ஒருவர் ஏழாவது தடவை கிராமசேவகர் மூலமாக பிறப்பிக்கப்பட்ட பிடிவிருந்தில் கைது செய்யப்பட்டார். 10 மாதங்கள் தாபரிப்பு பணம் கட்டத் தவறிய இந்நபருக்கு 10 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சுழிபுரத்தைச்சேர்ந்த ஆழ்வான் நித்தியானந்தன் என்பவர் உடுவில் மல்வத்தை சேர்ந்த தமது மனைவியான தவமணி என்பவருக்கு தாபரிப்பு பணம் செலுத்திவந்தார்.

ஆனல் கடந்த 10 மாதங்களாக இவர் தாபரிப்பும்பணத்தைச்செலுத்தாமலும் நீதிமன்றத்தில் ஆஜராகாமலும் தலைமறைவாக இருந்தார். ஏற்கனவே 6 தடவைகள் இவர்மீது பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டபோதும் இவர் கைதாகவில்லை. பின் தொல்புரம் கிராமசேவை அலுவலர் திரு. மு. தர்மதாசன்மூலமாக பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டதையடுத்து அவர் இந்நபரை தேடிக்கண்டுபிடித்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்.

கடந்த 10 மாதங்களாக செலுத்தாமல் விட்டுள்ள தாபரிப்பு பணம் 750 ரூபாவையும் செலுத்துமாறு நீதிபதி மேற்படி நபரைநோக்கிக் கூற அவர் மௌனம்சாதித்தபடி நின்றார்.

இறுதியில் அவருக்கு 10மாத சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (க)

## ஈழவேந்தன் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானத்தைகொலைசெய்ய முயன்ற செய்தியைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளோம். எந்த நிலையிலும் வன்செயல் தலைதூக்குவதை நாம் கண்டிக்காமல் இருக்கமுடியாது?

இவ்வாறு தமிழ்ஈழ விடுதலை அணி அமைப்புச் செயலாளர் திரு ஈழவேந்தன் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சிவஞானத்தை கொலைசெய்ய முயன்ற சம்பவத்தை கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## "ஏட்டுக் கல்வியால் எல்லாவற்றையும் சாதிக்கமுடியாது"

[சரவெட்டி]

''ஏட்டுக் கல்வியினல் நாம் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியாது, சாதனைக்கலையும் நாம் கற்று இருக்க வேண்டியது அவசியமானது''

இவ்வாறு யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் கட்டைவேலி-நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் முதலுதவியும், பராமரிப்பும்' பற்றிய பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் இவ் அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது.

உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வீ. கே. ஈசுரபாதம் உட்பட பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். பயிற்சியை வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. சி எஸ். சுப்பிரமணியம் ஆரம்பித்து வைத்தார். கட்டைவேலி. நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த 70 பெண்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டார்கள்.

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

வின்ஸர் தினசரி 5 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
From: 27 — 29-11-82
A DAZZLING ROMANTIC THRILLER
TIME AFTER TIME
From: 1-12-82 SO FINE

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 4-30, 7-00, 9-30 சனி, ஞாயிறு 2-00
1941
(War Film)

சாந்தி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
2-வது வெற்றி வாரம்
எம். ஜி. ஆர். - லதா
நவரத்தினம்
A. P. N.இன் வண்ணப்படம்

றீகல் தினசரி 4 காட்சிகள்
(யாழ், நகர்)
ரவிச்சந்திரன், ஜெயலலிதா, அசோகன், நாகேஷ்
நான் (ஈஸ்மன்ட் கலர்)

## சோழர்கால விளக்குகளின் கண்காட்சி

சென்னை, நவ. 27

சோழர் காலத்து வடிவமைப்பிலான விளக்குகளின் கண்காட்சி ஒன்று சென்னையில் நடைபெறும். இக் கண்காட்சியில் பல்லினவடிவிலான 7,000 விளக்குகளைக் காட்சிக்கு வைக்க ஒழுங்குகள் பூர்த்தியாகி உள்ளன.

காட்சிக்கு வைக்கப்படும் இவ் விளக்குகள் தமிழகம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் உற்பத்தி செய்யப்பட்டதாகவும், தனிப்பட்டவர்களால் சேகரித்து வைக்கப்பட்ட பழமையான விளக்குகளாகவும் இருக்கும்.

சோழமன்னர் காலத்துச் சிறப்பு வேலைப்பாடுடைய விளக்குகளும் சில இக் கண்காட்சியில் இடம்பெறும். க

## காவலில் 104 பேர்

சென்னை நவ. 27

தமிழ் நாட்டில் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் 104 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [க]

## 'அமிரை அகற்றிவிட்டு குட்டிமணியை தலைவராக நியமிப்பீர்களா?" சபையில் பிரதமர் கேள்வி

(கொழும்பு)

திரு. அமிர்தலிங்கத்தை அப்புறப்படுத்திவிட்டு குட்டிமணியை தலைவராக நியமிப்பீர்களா? என்று பாராளுமன்றத்தில் அவசரகால சட்டவிவாதத்தின் போது பிரதமர் ஆர். பிரேமதாசா கூட்டணி உறுப்பினர்களை பார்த்து கேள்வி எழுப்பினர்.

விவாதத்தின்போது ஒரு கட்டத்தில், பிரதமர் 'யாழ்ப்பாண மாவட்டத்தில் அசாதாரணமான சூழ்நிலை நிலவுகிறது' என்றார்.

திருமலை எம். பி: அரசியல் தீர்வுகாணப்பட்டால் அந்த நிலை இருக்காது.

பிரதமர்: ''அமிரை அப்புறப்படுத்திவிட்டு குட்டிமணியை தலைவராக நியமிப்பீர்களா?''

சபையில் 'குட்டிமணி' குட்டிமணி' என்ற கூச்சல் பின்வரிசையில் எழுந்தது.) (இ-க)

## "வண.சிங்கராயரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுங்கள்!'

### மதகுருமார் இல்ல அதிபர் ஆட்கொணர்வு மனு தாக்கல்

(கொழும்பு)

இராணுவ பாதுகாப்பில் இருந்து வரும் வணபிதா சிங்கராயர் இந்த நாட்டின் வழமையான சட்டங்களுக்கான நீதிமன்ற மொன்றிலோ அல்லது நீதிபதி ஒருவர் முன்னிலையிலோ ஆஜர் செய்யப்படவில்லை. இவ்வாறு அவரை கடந்த 14 ந் திகதியிலிருந்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாது தடுத்து வைத்திருக்கின்றமை அநீதியான செயலாகும்.

இவ்வாறு மதகுரு வண. ஏ சிங்கராயரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆட்கொணர்வு மனுவை யாழ்ப்பாணம் மதகுருமார் இல்ல தலைமை அடிகள் வண. ஹிலேரியன் வேதநாயகம் நேற்று தாக்கல் செய்தார். இம் மனுவில் இராணுவ தளபதி, பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம்மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வணபிதா எ. சிங்கராயர் கடந்த 14 ந் திகதி இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டார். இத்தினத்துக்கு முதல்நாள் சிங்கராயர் அடிகளின் கொழும்புத்துறை வீதி ஆச்சிரமம் பல இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர்களால் அவரது அனுமதி இன்றி சோதனையிடப்பட்டது.

சிங்கராயர் அடிகள்பற்றி எமக்கு எதுவித நேர்த்தியான தகவல்களையும் பெற்றுக்கொள்வது சிரமமாக உள்ளது. அத்துடன் அவருக்கும் அன்றாட சமய அனுட்டினங்களை மேற்கொள்வதும் அசௌகரியமாக இருக்கும்.

ஆகையினல் உடனடியாக அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். [கி]

## பிரான்ஸ் ஜனுதிபதியின் இந்திய விஜயம்

புதுடில்லி, நவ. 27

பிரான்ஸ் ஜனுதிபதி திரு. மிட்டராண்ட் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று இந்தியா வருகிறார்.

இவருடன் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர், வர்த்தக அமைச்சர், கலாச்சார அமைச்சர் ஆகியோரடங்கிய உயரதிகாரிகள் குழுவொன்றும் இந்தியாவிற்கு விஜயம் செய்கிறது

திரு. மிட்டராண்ட் ராஷ்டிரபதி பவனில் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்து சர்வதேச விவகாரங்கள், பிரான்ஸ் - இந்திய உறவுகள் ஆகியன குறித்து கலந்துரையாடவுள்ளார்.

திரு மிட்டராண்ட் இந்திய ஜனுதிபதி திரு ஸெயில் சிங்கையும் சந்தித்து உரையாற்றுவார்.

இவர் திங்கட்கிழமை இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுவார்.

திரு. மிட்டராண்ட் ஆந்திரா பிரதேசம், பெங்களூர் ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார். (வெ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை சோதிட ஆய்வு மன்றத்தின் ஆய்வரங்கு இன்று மாலை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது ஆய்வரங்கில் 'ஆன்மீகமும்ஜோதிடமும்'' என்றதலைப்பில் பண்டிட் கே. என். நவரத்தினம் ஆய்வுரை வழங்குவார். (கெ)

## குருநகர் மீனவரைக் காணவில்லை

[யாழ்ப்பாணம்]

குருநகரைச் சேர்ந்த கடற்றொழிலாளியான 35 வயதான எம். இராசு என்பவரைக் காணவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்டி, ராஜன் ஆகியோருடன் இவர் கடற்றொழிலுக்குப் படகில் சென்றதாகவும், இருவரும் நித்திரை செய்த பின் எழுந்து பார்த்தபோது படகோட்டிச்சென்ற இராசுவைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது. இச்சம்பவம் கற்கடதீவுக்கு அண்மையில் நடந்துள்ளது. [க]

## பொலிஸ்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மன்னரிலிருந்து வெளியூருக்குச் சென்ற பஸ் ஒன்றில் ஏற்பட்ட சம்பவமொன்றையடுத்து பஸ் சாரதி பஸ் வண்டியை பொலிஸ் நிலையத்தில் நிறுத்தியபோதே இச் சச்சரவு ஏற்பட்டது.

## தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல்சேவை

# நீண்டகால ஊழலை ஒழிக்க புதிய திட்டம் அமுலாகும்!

(கொழும்பு)

தலைமன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்குமிடையே நடைபெறும் கப்பல் போக்குவரத்துச் சேவையில் நீண்டகாலமாக நிலவிவந்த ஊழலை ஒழிக்கும் வகையில் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை இந்திய உயர் அதிகாரிகளுக்கிடையில் கொழும்பில் நடந்த உவர்மட்ட மகாநாட்டில் இணக்கம் காணப்பட்டது.

குறிப்பாக டிக்கட் விநியோக முறையில் நீண்டகாலமாக இருந்து வந்த சீர்கேடுகள் இதன்மூலம் நீக்கப்படுகிறது.

★இந்தியா செல்வோருக்கு வழங்கப்படும் டிக்கட் முறையில் மாற்றம் செய்யப்படும். டிக்கட்டில் பெயர், புறப்படும் திகதி பாஸ்போர்ட் இலக்கம் ஆகியன இனிக்குறிப்பிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

★கப்பலில் செல்வோர் பிரயாணிகள் தொகை அதிகரிக்கப்படும். 800 பிரயாணிகள் இதுவரை காலமும் பயணம் செய்தனர். 1100 பிரயாணிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளனர்.

★இலங்கை வரும் இந்தியப் பிரயாணிகளுக்கு வழங்கப்படும் டிக்கட் முறையில் கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளது திரும்புகின்ற காலம், மற்றும் திரும்புவதற்கான (றிட்டேன்) டிக்கட்டும் பெற்றே இங்குவர வேண்டும். இதனால் அவர்கள் திரும்புகிற காலம் குறிப்பிடப்படுகின்றது.

★ஏற்றுமதி இறக்குமதிவேலைகளை தலைமன்னாரிலேயே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 150 தொன் சரக்கு ஏற்றுமதி இறக்குமதியை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலநிலைகாரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ள கப்பல் சேவை ஜனவரி 3-ம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் போது புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்,

குடிவரவு, குடி அகல்வு திணைக்கள கட்டுப்பாட்டதிகாரி திரு. எம். ஏ. ஜே. வணிகரத்ன, இந்திய தூதரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி செல்வி நியாபுரா ராவ், இலங்கை சுங்கப்பகுதி ஏச். பி. திஸநாயக்கா, இந்திய நிதி அமைச்சு உயர் அதிகாரி திரு. ஏ. கே. சப்ரா, இந்திய கப்பல் கூட்டுத்தாபனத்தலைவர் திரு. வி. நீலகாந்தன், தென்னிந்திய புகையிரத சேவைவர்த்தக அத்தியட்சகர் திரு. ரி எஸ் நம்மாள்வார்; இலங்கை ரயில்வே திணைக்கள முகாமையாளர் திரு. வீரசூரியா உட்பட மற்றும் பல உயர் அதிகாரிகள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

## உண்ணாவிரதம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

குருநகரில், சின்னக்கடை உட்பட சகல கடைகளும் நேற்று மூடப்பட்டிருந்தன. பரபரப்பான இந்தப்பகுதியில் மயான அமைதி நிலவியது.

இந்த மௌன ஊர்வலத்தினர் புனித யாகப்பர்-பிரதான வீதி 6-ம் குறுக்குத் தெரு-யாங்சால், சென் பற்றிக்ஸ் மத்திய கிழக்கு வீதி - தண்ணீர்த் தாங்கி வீதி- றெக்கிளமேசன் வீதியூடாக ஞானப்பிரகாசியார் சிலை முன்றலில் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர்.

கூடாரம் அடித்து இவர்கள் உண்ணாவிரதமிருந்தனர்.

குருநகர் கிறிஸ்தவ வாலிபர் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஊர்வலத்திலும் உண்ணாவிரதத்திலும் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில மாணவ மாணவிகள் யாழ். மாநகராட்சி மன்றத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் பாடசாலை மாணவர்கள் மதகுருமார் கன்னியாஸ்திரிகளும் கலந்திருக்கக் காணப்பட்டனர். (மா)

## கரவெட்டியில்

(கரவெட்டி)

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் சுமார் 500 பேர் நேற்று கறுத்தப்பட்டி அணிந்து கொண்டு கொட்டும் மழையிலும் உண்ணாவிரதம் இருந்தனர். உண்ணாவிரதத்துக்கு ஆதரவுதெரிவித்தநெல்லியடிப் பகுதிகளிலுள்ளகடைகள் பூட்டப் பட்டிருந்தன.

நேற்றுக் காலை 8 மணிக்கு அந்தோனியார் ஆலய மணி ஒலி எழுப்ப உண்ணாவிரதம் ஆரம்பமானது. திரு இருதயக்கல்லூரியில் வகுப்புகள் நடைபெற்றும் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்வதற்காக மாணவர்கள் சென்றதால் பாடசாலை வெறிச்சோடிக் கிடந்தது.

## பெண்ணின் பெற்றோரை நீதிமன்றில் ஆஜராக பணிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயிலுள்ள ஒரு கன்னியர் மடத்தில் யாழ். நீதவானின் உத்தரவின் பேரில் கடந்த மாதம் 19ம் திகதி அனுமதிக்கப் பட்ட ஜூலியானா பேர்ணி என்ற இளம் பெண் அங்கிருந்து காணாமல் போனதை யடுத்து இப்பெண்ணின் பெற்றோரை டிசம்பர் 1ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும் படி யாழ் நீதவான் திரு. ரி. லோகநாதன் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றிய விபரம் வருமாறு:- காணாமல் போன ஜூலியனா பேர்ணி, பீட்டர் போல் என்பவரை கடந்த மாதம் பதிவுத் திருமணம் செய்து கொண்டார். இது தொடர்பாக இப்பெண்ணின் பெற்றோர் பொலிஸில் புகார் செய்ததையடுத்து இத்தம்பதிகள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிபதி ஜூலியானா பேர்ணியை 82 அக்டோபர் 26ந் திகதி வரை மானிப்பாயிலுள்ள கன்னியர் மடமொன்றில் பாதுகாப்பில் வைக்கும்படிஉத்தரவிட்டார் இதனைத் தொடர்ந்து இப்பெண்ணின் கணவரான பீட்டர்போல் தமது மனைவி அக் கன்னியர் மடத்தில் வைக்கப்பட்டிருப்பது பாதுகாப்புக்கு இடஞ்சலாக இருக்குமென நீதவானின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தார்.

இதனையடுத்து நீதவான் ஜூலியானா பேர்ணியை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளையிட்டார். அப்பொழுது அவர் அங்கிருந்தும் காணாமல் போயிருப்பதாக தெரிவிக்கப் பட்டது.

இப் பெண் காணாமல் போயிருப்பதையடுத்து இவரின் கணவரான பீட்டர்போல் தரப்பில் சட்டத்தரணி ஆர் தவராசா நீதிமன்றில் ஆஜராகி காணாமல் போன பெண் தங்கியிருந்த மடத்திலிருந்தும் அவரது பெற்றோர்களால் கடத்தப்பட்டுள்ளார் என்று நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாக தெரிவித்தார் இதனைத்தொடர்ந்தே நீதவான் இப் பெண்ணின் பெற்றோரை டிசம்பர் 1-ம் திகதி யாழ். நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அறிவித்தார்.

யாழ்- மாவட்ட நீதிமன்றத்திலும் இப்பெண் கடத்தல் தொடர்பாக ஆட்கொணர்வு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. பெண்ணின் பெற்றோரை டிசம்பர் முதலாந்திகதி ஆஜராகும் படி இந் நீதிமன்றமும் உத்தரவு பிறப்பித்துள்ளது. (கி)


## மரண அறிவித்தல்

### திருமதி வைத்தியலிங்கம் கண்மணி

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பையா வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவி கண்மணி 27.11 82 அன்று காலமாகிவிட்டார். இவர் சிவசோதி, திருஞானம் (பிராங்ஸ்), அருணகிரி (ஆரணி மில்ஸ் யாழ்ப்பாணம் உரிமையாளர்.) குணசோதி, நகுலநாதன் (V S. S K.) ஆகியோரின் தாயாரும் சிவபாதசுந்தரம் (பாரத் ஹோட்டல், கொழும்பு) V. S S. K இன் உரிமையாளர் வை. விஸ்வரத்தினம் (அம்பிகா) ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை 28 11 82 காலை 10 மணியளவில் புங்குடுதீவு மணற்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5308


## ஜனாதிபதி, அமைச்சர்களைக் கொன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடுச்செட்டிக்குளம் முன்னாள் கிராமசபைத்தலைவர் திரு. பொ. திருஞானசம்பந்தன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார். பிரதி பாதுகாப்பமைச்சர் திரு. வெரப்பிட்டிய, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் ஆகியோரும் கூட்டத்தில் சமூகமாய் இருந்தனர்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் ஏராளமான மக்கள் ஜனாதிபதியின் பேச்சைக் கேட்க குழுமிருந்தனர். ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்த்தன தமது உரையில் கூறியதாவது:

முடிவடைந்த ஜனா... தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் பெருந்தொகையான வாக்குகள் ஐ தே கட்சிக்கு கிடைத்தன இந் நாட்டில் வவனியாவில் மட்டும் எனக்கு 11720 வாக்குகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 9385 வாக்குகளும் ஏனைய கட்சிகளுக்கு 4500 வாக்குகளும் கிடைத்தன. இங்கு ஒருபாராளுமன்ற தேர்தல் நடந்திருக்குமானால் வவனியா தொகுதியை ஐ. தே. க. கைப்பற்றியிருக்கும். இதேபோன்று மன்னார் தொகுதியையும் ஐ. தே. க. கைப்பற்றியிருக்கும் முல்லைத்தீவில் திரு. குமார் பொன்னம்பலம் வெற்றி பெற்றிருப்பார் வன்னித் தொகுதியில் மட்டும் ஐ தேசியக் கட்சிக்கு 32834 வாக்குகள் கிடைத்தன இப்படிப் பார்க்கையில் வன்னித்தொகுதியை ஐ தே. கட்சி வெற்றி கொண்டுள்ளது எனலாம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவரால் இந்த நாட்டை ஆளமுடியாது. அதற்கு பாராளுமன்றமும் தேவைப்படுகிறது பொதுத் தேர்தல் நடந்திருந்தால் எமது கட்சியில் 126 பேர்தெரிவாகியிருப்பர். தற்போதய சூழ் நிலையில் பொதுத் தேர்தலைநடத்துவதா அல்லது இப்போதைய ஆட்சிக்காலத்தைத் தொடர்ந்து நீடிப்பதா என்பதுபற்றித் தீர்மானிக்க வேண்டிய நிலையில் நான் இருக்கிறேன்.

இந்த நாட்டில் ஜனநாயகம் உருப்பட வேண்டும். அபிவிருத்தித் திட்டங்கள் முன்னேறவேண்டும். அதேசமயம் அசம்பாவிதங்களும் இல்லாமலிருக்கவேண்டும் என்பது என் விருப்பம்.

### சதித்திட்டம்

சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதித் தேர்தலைக் குழப்புவதற்குச் சதித்திட்டம் தீட்டியிருந்தார்கள். வவனியா மாவட்ட அமைச்சரின் வீட்டைத் தகர்க்கவும் திட்டம்தீட்டியிருந்தார்கள். அத்துடன் ஜனாதிபதி, பிரதமமந்திரி, மற்றும் அமைச்சர்களைக் கொல்லவும் இவர்களை ம... தலைகீழாகத் தொங்கவிடவும் ஜனாதிபதியின் உடலை மரத்தில் தொங்கவிடவும் திட்டம் போட்டிருந்தார்கள். புலன் விசாரணைகளில் இந்த விடயங்கள் அம்பலமாகியுள்ளன. இப்படித் திட்டம் தீட்டிய சுதந்திரக்கட்சிப் பிரமுகர்கள் மீது அடுத்தவாரம் வழக்குத் தொடரப்படவிருக்கிறது. இது பற்றி பிரதம மந்திரியும் நேற்றுப் பாராளுமன்றத்தில் விளக்கியிருந்தார்.

இவைபற்றி திருமதி பண்டாரநாயக்க ஒன்றுமே செய்யாமல் பொம்மைபோலிருந்து வருகிறார். இப்படியாகச் சதித்திட்டம் புரிகிறவர்களையும், பயங்கரவாத நோக்கம் உடையவர்களையுமா பாராளுமன்றத்துக்குக் கொண்டுவருவது? இந்த நிலைமையில் நீங்கள் இப்போதைய ஆட்சியை நீடிப்பதா என்பது பற்றி நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

திருமதி பண்டாரநாயக்க மக்கள் அனுமதியைப் பெறாமலே பாராளுமன்றத்தின் ஆயுளை இரண்டுவருடங்களால் நீடித்தார். அதனை நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். ஜீவியகாலம் வரையும் கூட பாராளுமன்றத்தை நீடிக்க முடியும் என்று அவர்கள் கூறினார்கள் அத்துடன் ஆறுவருடங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தாமலிருந்தார்கள் ஆட்சியை நீடிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் நூற்றுக்கு நூறு வீதம் ஆதரவுதந்தாலும் பொதுமக்களின் ஆணை தேவை. இந்த நாட்டில் 81 லட்சம் வாக்காளர்கள் உண்டு கடந்த காலங்களில் தேர்தல்களில் ஒவ்வொருகட்சிக்கும் உள்ள சின்னங்களுக்கு இவர்கள் வாக்கு போட்டார்கள். இந்தத் தேர்தலில் லாம்பும் குடமும் சின்னமாக உள்ளன. இவைகளில் லாம்புக்கு வாக்களித்து மேலும் 6 வருடங்கள் ஆட்சியை நீடிக்க ஆணை வழங்குவீர்கள் என்று எதிர் பார்க்கின்றேன்.

வவனியா மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்வது பற்றி அண்மையில் உலக வங்கி நிபுணர்கள் ஆய்வுகளை நடத்தி முடிந்திருக்கிறார்கள். இவைகளை தானோ எம். பிக்களோ நிறைவேற்ற முடியாது. மாவட்ட அபிவிருத்திசபைகள் மூலமே இவை செயல்படுத்தப்பட முடியும்.

## பெண்களே இல்லாத..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்ட முடியாது. மதகுருமார்கள் பற்றி ஆயுதப்படையினர் தெரிவித்ததை யடுத்து இலங்கை வானொலியினால் பயங்கரவாதத்தை அரசுதான் தேற்றுவிக்கிறது.

மதகுருமார்கள் பற்றி ஆயுதப் படையினர் தெரிவித்ததையடுத்து இலங்கைவானொலியில் இரவுபகலாக ஒலிபரப்பப்பட்டுவருகிறது. ஆனால் தமிழ் குழந்தைகூட இதனை ஒத்துக்கொள்ளாது. தமிழ் மக்கள் வானொலி செய்தியை முற்றிம் முழுதாக நிராகரித்து விட்டனர்.

''விரிவுரையாளர் நித்தியானந்தனும் மனைவி நிர்மலாவும் கைதுசெய்யப்பட்டு இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

''நிர்மலா நல்ல குடும்பத்தை சேர்ந்தபெண், கலாச்சாரமுள்ள படித்த பெண் பிரதமர் இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் வேறு ஒருஇடத்திற்கு மாற்றப்பட்டு விசாரணை நடைபெற வேண்டும்.

வடபகுதியில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு கடும் நடவடிக்கை எடுப்பதாக அரசு தரப்பில் கூறினார்கள். ஆனால் அரசுஇந்த நடவடிக்கையினால் பயங்கரவாதத்தினால் அரசு தான்தோற்றுவிக்கிறது.

''சாதாரண சட்டத்தின்கீழ் மதகுருமாரையும் ஏனையோரையும் விசாரணை செய்ய நட நடவடிக்கை எடுக்க வேண்டும் (இ)

## தமிழர் கண்ணீரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிபடுதோல்வி அடைந்ததாலும், எமது தமிழ் மக்கள் ஒற்றுமையாக நின்று எங்கள் அத்தனைபேரையும் ஒன்று சேர்த்து அனுப்பி வைத்ததாலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி எமக்குக் கிடைத்தது''.

இச்சந்தர்ப்பத்தைப் பலவழிகளிலும் பயன்படுத்தியுள்ளோம்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில்:- எனது வீடு தீக்கியையான போது எமக்கு ஆதரவு தந்து. அன்பு தந்து, கண்ணீரைத் துடைத்தவர்கள் இன்று கைது செய்யப்பட்ட மதகுருமார்கள் அவர்கள் விடுதலைக்காக ஒன்று பட்டுக்குரல் கொடுப்போம்'' என்றார்.

தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், பருத்தித்துறை எம்.பி. திரு. க. துரைரத்தினம், கோப்பாய் எம். பி. திரு மு. ஆலாலசுந்தரம், யாழ் முதல்வர் திரு. இராச விஸ்வநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q B 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.